www.padippakam.com



# மாத்தையா கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் பொட்டம்மான் தலைமையில் விசாரணை நடக்கிறது


டி.பீ.எஸ்.ஜெயராஜ்

## இந்திய உளவுத்துறையுடன் இணைந்து சதி முயற்சி என்று முன்னாள் பிரதி தலைவர் மீது குற்றப்பத்திரிகை.

## பிரபாகரன் மற்றும் 11 புலிப்பிரமுகர்களை ஒழித்துவிட்டு தலைமைத்துவத்தைக் கைப்பற்ற மாத்தையா முனைந்தாராம்.

## விசாரணை முடிந்ததும் விபரங்கள் வெளியிடப்படும் என்று பிரபாகரன் அறிவிப்பு.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதி—தலைவரும் அதன் பழைய பிரதான பிராந்தியத் தளபதிகளில் ஒருவரும் அவ்வியக்கத்தின் அரசியல் கட்சியான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முன்னாள் தலைவருமான மாத்தையா என்ற கோபாலசாமி மகேந்திரராஜா இயக்கத் தலைவரும் பிரதம தளபதியுமான திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனின் பணிப்புரையின் பேரில் விடுதலைப் புலிகள் இயக்கத்தவரால் கைது செய்யப்பட்டுள்ளார். திரு. மாத்தையா தற்போது சாவகச்சேரியில் கல்வயல் பகுதியில் உள்ள இல்லமொன்றில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உளவுப் படைப் பிரிவான Tiger organisation Security Intelligence Service (TOSIS) இன் பொறுப்பாளர் பொட்டம்மான் என்ற சிவசங்கரனின் நேரடிக் கண்காணிப்பில் இவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்திய. இலங்கை நாடுகளின் உளவுப் பிரிவுகள் ஆகியவற்றுடன் தொடர்பு பூண்டிருந்தார் என்றும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு. பிரபாகரன் மற்றும் 11 விடுதலைப் புலி முன்னணிப் பிரமுகர்களைக் கொலை செய்வதென்று இந்திய உளவுப்படை பிரிவு "றோ" தீட்டிய சதிக்கு உடந்தையாக விளங்கினார் என்பதுமே திரு. மாத்தையாவுக்கு எதிரான பிரதான குற்றச்சாட்டு என்று அறியப்படுகிறது. இப்பிரதானக் குற்றச் சாட்டுடன் வேறு சில குற்றச்சாட்டுகளும் திரு. மாத்தையா மீது சுமத்தப்பட்டுள்ளன. இவை தொடர்பான விசாரணைகளை உளவுப்படைப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பொட்டு நேரடியாக மேற்பார்வை செய்து வருகிறார். இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் 2ம் திகதியன்று கைது செய்யப்பட்ட திரு. மாத்தையா மீதான விசாரணைகள் பெருமளவில் பூர்த்தி அடைந்துள்ளதாக அறியப்படுகிறது. மிக விரைவில் புலிகளின் தலைமைப்பீடம் இது பற்றிய பகிரங்க அறிவிப்பு ஒன்றைச் செய்ய உள்ளது என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.



### இரு கூறுகள்

தற்போது மாத்தையா என்ற மகேந்திரராஜா தொடர்பான பிரச்சனையை நோக்கும்போது அதை இரு வேறு கூறுகளாகவே பார்க்க வேண்டியுள்ளது. முதலாவது அவர் கைது செய்யப்பட்டு விசேட தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யப்பட்டு வருவது தொடர்பானது. இதற்குக் காரணம் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனையும் தலைமைப்பீடத்தைச் சேர்ந்த 11 பேரையும் கொல்வதற்கு இலங்கையின் அனுசரணையுடன் இந்திய உளவுப்பிரிவு தீட்டிய சதி முயற்சிக்குத் திரு. மாத்தையா துணை போனார் அல்லது உடந்தையாக இருந்தார் என்ற சந்தேகம் தொடர்பானது. இரண்டாவது விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனுக்கும் பிரதி தலைவர் மாத்தையாவுக்கும் இடையில் முன்னரே தோன்றிய கசப்புணர்வு. எந்தவொரு இயக்கத்திலும் உள்ளது போல் கருத்து வேறுபாடுகள் பிரிவுகள் விடுதலைப் புலி மேல்மட்டத்திலும் இருந்தது. ஆனால் அவை விரோதங்களாக. பிளவுகளாக விஸ்வரூபமெடுத்தது வருத்தத்துக்குரிய விடயமே. பிரபாகரன் — மாத்தையாவுக்கிடையில் வேறுபாடுகள் தோன்றிய முன்னைய நிகழ்வை நோக்கிவிட்டுப் பின்னர் இந்தியச் சதி. கைது பற்றி நோக்குவோம்.

### நரநாராயணர்கள்

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போது விடுதலைப் புலிகள் தமது அரசியல் கட்சியாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்ற கட்சியைப் பதிவு செய்தனர். இதன் தலைவராக மாத்தையா நியமிக்கப்பட்டார். செயலாளராக யோகி நியமிக்கப்பட்டார். மட்டக்களப்பு வடக்கில் வாகரையில் முதல் மாநில மாநாடும் மாத்தையா தலைமையில் நடைபெற்றது. இதற்கு முன்னரே இயக்கத்தின் பிரதி—தலைவராக மாத்தையா பொறுப்பு வகித்தார். இந்தியாவுக்குப் பேச்சுவார்த்தைகளை முன்னிட்டுப் பிரபாகரன் செல்கையில் தான் வரும்வரை மாத்தையாவையே இயக்கத்துக்குப் பொறுப்பாகத் தமது வாரிசாக வரித்துச் சென்றார். தான் இந்தியாவில் இருந்து விடுக்கும் உத்தரவைக் கூட மாத்தையாவுக்குத் தேவை ஏற்படின் நிராகரிக்கும் அதிகாரத்தைக் கூட வழங்கினார். பின்னர் இடைக்கால நிர்வாகம் குறித்து இந்தியத் தூதர் டிக்சித்துடன் நடைபெற்ற பேச்சுக்களின் பெறுபேறுக் குறிப்பில் புலிகள் சார்பில் மாத்தையா பிரதி—தலைவர் என்ற ரீதியில் கைச்சாத்திட்டார். புலிகளையே தமிழர் பிரதிநிதிகளாக இந்திய. இலங்கை அரசாங்கங்கள் அங்கீகரித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணம் அது.

1990ல் கொழும்பு அரசுடன் பேச்சுவார்த்தைகள் முறிந்து போர் மூண்ட பின்னரும் மாத்தையா தொடர்ந்து செயல்பட்டார். அரசியல் ராணுவ ரீதியாகப் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டார். பல பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டார். பல வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்து வந்தார்.

இயக்கத் தலைவராகவும் ராணுவத் தளபதியாகவும் பிரபாகரன் விளங்கினார். இயக்கத்தின் பிரதி— தலைவராகவும் அரசியல் கட்சித் தலைவராகவும் மாத்தையா விளங்கினார். ராணுவத்துக்குப் பிரபாகரன் அரசியலுக்கு மாத்தையா என்ற இரு முனைகளாக விளங்கிய போதிலும் இயக்கத்தின் முழுக் கட்டுப்பாடும் தலைமைத்துவமும் பிரபாகரனிடமே இருந்தது. மாத்தையா இரண்டாம் நிலையில் விருப்புடன் செயலாற்றினார். மகாபாரதத்தில் குருஷேத்திரம் போரில் இணையாகச் செயல்பட்ட கிருஷ்ணனையும் அருச்சுனனையும் "நரநாராயணர்கள்" என்றே குறிப்பிடுவர்.

தமிழ் ஈழ விடுதலைப் போரிலும் பிரபாகரன். மாத்தையா நரநாராயணர் போலவே செயல்பட்டனர்.

### விரிசலின் தோற்றம்

பிரபாகரன் — மாத்தையாவுக்கிடையில் பிரச்சினை. பிரபாகரன்— கிட்டுவுக்கிடையில் பிரச்சினை. மாத்தையா— கிட்டுவுக்கு இடையில் பிரச்சினை. போன்ற செய்திகள் இலங்கை. இந்திய நாசகார சக்திகளால் பலமுறை இட்டுக் கட்டி வரப்பட்டவையாகும். ஒரு முறை இந்தியப் படைகள் இலங்கையில் இருந்தபோது வன்னிக் காட்டில் வைத்து மாத்தையா பிரபாகரனை சுட்டுக் கொன்றுவிட்டார் என்று இந்திய உளவுப் பிரிவு வதந்தி பரப்பியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1990 ஆண்டு போர் ஆரம்பித்த பின்னரும் மாத்தையா— பிரபாகரன் பிளவு பற்றிச் செய்திகள் வெளியிடப்பட்டன. பிரபாகரனை முதன் முதலாகவும் பின்னர் ஆகக் கூடிய தடவைகளாகவும் பேட்டி கண்டவர் என்ற பெயர் பெற்ற இந்தியப் பெண் பத்திரிகையாளர் அனிதா பிரதாப் "சண்டே" என்ற சஞ்சிகையில் பிரபாகரனுக்கும் அவரது சகாக்களுக்கும் முன்னர் போல் உறவில்லை. பிரபாகரனுக்கும் ஏனையோருக்கும் இடையில் பழைய அன்னியோன்னியம் காணப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். விளைவு? அடுத்...

4ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

3ம் பக்கத் தொடர்ச்சி

முறை அவர் யாழ்ப்பாணம் சென்றபோது அவருக்குப் பிரபாகரனைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டவில்லை.

இதன் பின்னர் முதலாவது முத்தமிழ்விழா சாவகச்சேரியில் நடைபெற்ற போது பிரபாகரனும் மாத்தையாவும் சேர்ந்தே வந்தனர். ஒன்றாக மேடையேறி அளவளாவி மகிழ்ந்தனர். இதன் மூலம் அச்சமயம் யாழ்ப்பாணத்தில் பரவி வந்த பிரபாகரன்—மாத்தையா பிளவு என்ற வதந்திக்கு ஆப்பு வைக்கப்பட்டது. இது நடந்தது 1991இல். பின்னர் "நக்கீரன்" பத்திரிகை "பிரபாகரன் இருக்குமிடத்தை இந்தியப் படைகள் நெருங்கினால்? என்று கேட்கிறது அதற்கு மாத்தையா பதில் "கற்றுப் பகுதியில் புல் முளைக்க 20 வருடம் எடுக்கும்".

## கட்சி கலைக்கப்பட்டது

1992ம் ஆண்டு முற்பகுதி இலங்கை அரசபடைகள் யாழ்ப்பாணக் குடாநட்டுக்குள் நுழைந்து விடும் என்பது போன்ற "படலையில் படைகள்" (Enemy at the Gates) சூழ்நிலை. திடீரென்று விடுதலைப் புலிகள் தலைவர் இயக்கத்தின் மத்திய செயல் குழுவினர் முக்கிய தளபதிகள். பொறுப்பாளர்கள் மற்றும் மக்கள் முன்னணி தலைமை உறுப்பினர்களை அழைக்கிறார். அங்கே ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போடுகிறார். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கலைக்கப்பட்டு விட்டது என்று அறிவிக்கிறார். கட்சியின் கிளைகளான சிற்றூரவைகளும் பேரூரவைகளும் இனிச் செயல்பட மாட்டா என்று கூறுகிறார். இந்த அவைகளின் பணிகள் சிறவற்றை உதாரணமாக "பாஸ்" வழங்குவது போன்றவற்றை கடல்புறா என்ற கடற்புலிகள் வசம் ஒப்படைக்கிறார். அரசியல் பணிகள் மத்திய செயல் குழு உறுப்பினர் "பேபி" சுப்பிரமணியத்திடம் ஒப்படைக்கப் படுகிறது. விடுதலைப் புலிகளிடையே குழப்பம். காரசாரமான கருத்துப் பரிமாற்றம். ஆனால் தலைவர் பேச்சுக்கு மறுப்பில்லை. ஏனெனில் அத்தகைய கட்டுப்பாடு மிகுந்தது அவ்வியக்கம்.

## மாத்தையாவின் அதிர்ச்சி

இந்த முடிவு மாத்தையாவுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்தது. பெரும்போர் வரப்போகிறது. புலிகள் மீண்டும் முழுமையான கரந்தடிப்படையாக மாறும் சூழ்நிலை தோன்றுகிறது என்பதை மாத்தையாவும் உணர்கிறார். கட்சியைக் கலைப்பதும் கலைக்காமல் விடுவதும் தலைவரின் முடிவைப் பொறுத்தது என்பதை அவர் ஏற்றுக் கொள்கிறார். ஆனால் கட்சிக் கலைப்புக்குக் காரணம் ஏன்? என்று தெரியாமல் குழம்புகிறார். தன்னிடம் இது பற்றி ஏன் தலைவர் முன்கூட்டியே கலந்தாலோசிக்கவில்லை என்று மனம் வெதும்புகிறார். தான் என்ன பிழை விட்டேன்? என்று வேதனைப் படுகிறார். அத்துடன் மாத்தையாவுக்கு ஓர் புதிய பொறுப்பு.

கிழக்கிற்கும் மணலாறு பிரதேசத்துக்கும் அவர் அனுப்பி வைக்கப்படுகிறார். அங்கு சில பணிகளை அவர் முனைப்பாக முன்னெடுத்துச் செல்கிறார். ஆனால் கொப்பெக்கடுவை மறைவையடுத்துப் பிரபாகரனின் போர்த்தந்திரம் மாறுகிறது. கிழக்கில் செயற்பாடுகளை வியாபிப்பதை மட்டுப்படுத்தி விட்டு வடக்கில் செயற்பாடுகளை முடுக்கிவிடத் திட்டமிடுகிறார். மாத்தையாவை மாத்திரமல்ல கருணா, கரிகாலன், நியூட்டன் போன்றோரையே வடக்கிற்குத் திருப்பி அழைக்கிறார்.

## மந்தச் செயற்பாடு

மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பிய மாத்தையா ஒரு வித மந்தச் செயல்பாட்டுடன் தான் காணப்படுகிறார். அவரது விசேட மெய்க்காப்பாளர் அணியாக 70 ஆயுதம் தரித்த போராளிகள் அவருடன் கூடவே காணப்படுகின்றனர். மாத்தையா கோப்பாய், சுதுமலை, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் மாறி மாறித் தங்குகிறார். முன்னர் போல் பெரிய ஆளணியுடன் அல்லது பல மெய்க்காவலருடன் திரிவதைத் தவிர்க்கிறார். ஒரு கைத்துப்பாக்கியுடனும் 2 முதல் 4 மெய்க்காவலருடனும் தான் அவர் நடமாடுகிறார். கோண்டாவில் தலைமைப் பணிமனைக்கு அடிக்கடி செல்வார். காயமடைந்த போராளிகளின் சிகிச்சை, ஊனமுற்ற போராளிகளின் மறுவாழ்வு ஆகிய பணிகளில் அக்கறை காட்டி வருகிறார். இடம்பெயரும் தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளிலும் ஈடுபாடு காட்டி வருகிறார். ஆனால் முன்னர் போல் அதிகமாகச் சுற்றித் திரிவதில்லை. ஏறக்குறைய ஒரு விசராந்தியான போக்கைக் கடைப் பிடிக்கிறார். முன்னர் மக்கள் முன்னணித் தலைவராகச் செயல்பட்டபோது ஒவ்வொரு நாளும் ஏதோவொரு பொது நிகழ்ச்சியில் மாத்தையா கலந்து கொள்வார். அவரது பெயர் மற்றும் புகைப்படம் தினந்தோறும் யாழ்ப்பாணப் பத்திரிகைகளில் இடம்பெறும். ஆனால் தற்போது அப்படியான நிலைமை ஒன்றுமில்லை. எனவே மாத்தையாவின்



பெயர் மங்கி, மறையத் தொடங்குகிறது. மாத்தையாவோ தொடர்ந்தும் மௌனமாகத் தானுந் தன் பாடுமாக இருக்கிறார்.

## பிழையேது செய்தேன்

.........." பிழையேது செய்தேன்" என்றொரு தியாகராஜ பாகவதர் பாடல். அத்தகைய மனோநிலை தான் மாத்தையாவினுடையதும் கூட. தான் என்ன் பிழை செய்தேன்? தனக்கேன் இந்தத் தண்டனை என்பது போன்ற விடை காண முடியா வினாக்கள் மத்தியில் அவர் அல்லல் பட்டுக் கொண்டிருந்தார்.

மறுமுனையில் பிரபாகரன் சரியான காரணமின்றி இத்தகைய நடவடிக்கையில் இறங்கி இருக்க மாட்டார் என்ற கருத்து மேலோங்கி இருந்தது. சிற்றூரவைகள் பேரூரவைகள் மற்றும் இணக்க சபைகளில் ஏற்பட்ட ஊழல்கள். அதிகார துஷ்பிரயோகங்கள். இதனால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தி போன்றவை சில காரணங்களாக இருக்கலாம் என்று அனுமானிக்கப்பட்டது. மாத்தையா கூடுதலாக அரசியலில் ஈடுபட்டு இயக்கத்தில் ராணுவம் வேறு கட்சி வேறு என்ற நிலையைத் தோற்றுவிக்கிறார் என்பது மற்றொரு அபிப்பிராயம்.

மாத்தையாவுக்கு ஒரு குணம் உண்டு. தனக்கு வேண்டியவர்கள் தவறு செய்தாலும் அவற்றை பல முறை போர்த்து மூடுவதே அது. இதனால் தானோ என்னவோ கட்சி மட்டத்தில் நடைபெற்ற குறைபாடுகளை அவர் நிவர்த்தி செய்யவுமில்லை. அவை பற்றி பிரபாகரனிடம் கூறவுமில்லை. ஆனால் பிரபாகரனுக்கு இவை தொடர்பாக பல தகவல்கள் கிடைத்து வந்தன. சில சமயங்களில் அவர் நேரடியாகத் தலையிட்டு நீதி வழங்கிய சம்பவங்களும் உண்டு. ஆனால் இவை எல்லாவற்றுக்கும் மேலாக அரசபடைகள் குடாநாட்டைக் கைப்பற்றிவிட்டால் இந்தக் கட்சிக் கிளையினரை நயத்தாலும் பயத்தாலும் வெருட்டி, மருட்டி சில அரசியல் செயல்பாடுகளுக்கு "ஒத்தூதச் செய்யும்" அபாயமும் தட்டிக் கழிக்க முடியாத ஒன்றாகவே விளங்கியது. எனவே தான் உத்தியோக பூர்வமாக கட்சிக் கலைப்பு என்ற கருதியவரும் உண்டு.

## மௌன மோதல்

பிரபாகரன் பிறந்தது 1954. மாத்தையா பிறந்தது 1956. இருவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள். பொருளாதார ரீதியாக ஒருவர் உயர்ந்த குடும்பத்திலும் மற்றவர் தாழ்ந்த குடும்பத்திலும் பிறந்தவர். ஆனால் ஒரே பிராயத்தார். நீண்ட காலமாக ஒரே இயக்கத்தில் ஒரே கொள்கையுடன செயல்பட்டனர். நல்ல நண்பர்கள். சக போராளிகள். இயக்கத்தைப் பொறுத்த வரை பேபி சுப்பிரமணியம். அப்பையா. தேவரண்ணை போன்றவர்களை நீக்கி விட்டுப் பார்த்தால் பிரபாகரனுக்கு கிட்டத்தட்ட சமனான சிரேஷ்டத் தன்மை பெற்றவர் மாத்தையா. அத்துடன் தலைவர். போராளிகள். தொண்டர். ஆதரவாளர்களால் இரண்டாமவர் அல்லது உபதலைவர் என்ற பதவியைப் பெற்றவர். இந்த முதலாம் இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களிடையே ஓர் ஊடல். பனிப்போர் அல்லது மௌன மோதல் ஆகவே இது விளங்கியது. இருவருக்கும் நெருக்கமான அல்லது நடப்பது என்ன என்பதை நுட்பமாகப் புரிந்தோர்க்கு ஒன்று புலப்பட்டது. அடிப்படையில் இருவருக்கும் பிரச்சனையில்லை. ஒரு தற்காலிக முரண்பாடுதான். தலைவர் ஏன் இப்படிச் செய்தார் என்பதும் அவரே என்னை அழைத்து விளக்கம் தந்தால் என்ன? என்பது மாத்தையா தரப்பு நிலைப்பாடு. மாத்தையா என்னிடம் நேரில் வந்து விளக்கம் கேட்டால் கட்டாயம் சொல்வேன் என்பது பிரபாகரன் நிலைப்பாடு. நீண்ட கால நண்பர்களிடையே ஓர் பிணக்கு ஏற்பட்டால் "நீயா நானா முதலில் பேசுவது" என்பது போன்ற மனோபாவமே அங்கு நிலவியது. இது விரைவில் சரியாகிவிடும் என்பதே பலரதும் எண்ணம். ஆனால் விளையாட்டுப் போல் இருந்த கோபம் வினையாகி இன்று விபரீத விளைவைக் கொடுத்துவிட்டது. இரு பெரும் புள்ளிகளுக்கிடையில் ஏற்பட்ட பிணக்கு அவர்களாலேயே நீக்கப்பட வேண்டிய ஒன்று. வேறொரு—வராலும் தலையிட முடியாத சூழ்நிலை. அத்துடன் "பிரச்சினை" எது என்பதும் கேள்விக்குரியதே.

மாத்தையா மேலும் மேலும் விலகி மேலும் மேலும் ஒதுங்கிப் போக ஆரம்பித்தார். பொது நிகழ்ச்சிகளைத் தவிர்த்து ஏறக்குறைய தனிவழியைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தார். கடந்த ஆண்டு மாவீரர் தினத்தின் போது அவர் புதுக்குடியிருப்புப் பகுதியில் ஒரு சிறு அளவிலான கூட்டத்தில் கலந்து கொண்டாரே தவிர யாழ்ப்பாணத்தில நடந்த பெரு வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை. அதே போல் தளபதி கிட்டுவின் இறுதி நிகழ்ச்சிகளிலும் அவ[ர்] கலந்து கொள்ளவில்லை. ஆனா[ல்] பிரபாகரன் மற்றும் ஏனையோர் சென்[ற] பின்னர் கிட்டுவின் இல்லம் வந்[து] "கிட்டம்மா" வைச் சந்தித்துக் கண்ணீ[ர்] மல்கத் துக்கம் விசாரித்தார். இந்[த] மௌன மோதல் நடந்த காலத்தி[ல்] மாத்தையா சீருடை அணிவதை[த்] தவிர்த்து சாதாரண உடையணிந்[தே] எங்கும் காணப்பட்டார்.

பிரபாகரனுக்கும் மாத்தையாவுக்கு[ம்] இடையிலான பிளவு வலுத்துக் கொண்[டே] போனது. வல்வை—ஞானமூர்த்தி அப்ப[ா] போன்ற ஒரு பெரியவர் இந்த[ப்] பிரச்சினையைத் தீர்த்து வைத்திரு[]க்கலாம். ஆனால் இருவருமே இதை[த்] யிட்டுப் பிரஸ்தாபிக்காத நிலையி[ல்] எவரும் ஒன்றும் செய்ய முடியவில்லை[.] மற்றது தலைவருக்கும் பிரதி— தலை—வருக்குமிடையில் உள்ள பிரச்சனையி[ல்] வேறு யார் தலையிட முடியும்? ஒரு [ச]வேளை கிட்டு யாழ்ப்பாணம் திட்ட[]மிட்டபடி போயிருந்தால் இதில் சமரச[ம்] செய்து வைத்திருக்கக் கூடும். ஆனா[ல்] விதி வேறுவிதமாக விளையாடி விட்டது[.] விபரீதமான திருப்பங்களும் தோன்[றி] விட்டன.

## 21 மணி நேரம்

ஓகஸ்ட் மாதம் 2ம் திகதி மாலை ஓகஸ்ட் மாதம் 3ம் திகதி காலை இடையில் ஓரிரவு. மாலை, இர[வு] மறுநாள் காலை என் முப்பொழு துகளையும் உள்ளடக்கும் 21 மணி நேர[ம்] அந்த நீண்ட இரவில் யாழ்ப்பாணத்திலு[ம்] வன்னியிலும் புலிகள் ஒரு மாபெரு[ம்] ஒப்பரேஷன் ஒன்றை நடத்தின[ர்] ஏறக்குறைய சம காலத்தில் அல்ல[து] சொற்ப கால அவகாசத்தில் அடு[த்]துத்துப் பல இடங்களில் புலிப் போராளி[கள்] பாய்ந்தனர். ஏறக்குறைய ரெலோ[,] ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கங்களைத் த[டை] செய்தபோது புலிகள் செயல்பட்ட[து] போன்ற கட்டுக்கோப்பு. சீரான அ[ணி] வகுப்பு. செயற்பாடு. ஆனால் அப்போ[து] நடந்தது போல் ரத்தம் சிந்தப்படவில்லை[.] ஒரு ரத்தம் சிந்தா ஒப்பரேசனாகவே [] அமைந்து விட்டது. புலிகளின் இம்முறை மாற்றான் அல்லது [] அல்ல. களை எடுப்புத் த[] இயக்கத்துக்குள்ளும் இயக்கத்[] அண்டியும் இருந்த சிலரைச் ச[] கத்தின் பேரில் கைது செய்தமை[] நடந்தது. இயக்கத்தில் இருந்த [] இயக்கத்தை விட்டு விலகிய சிலர். ம[] முன்னணிக் கிளைகளின் முன்[] உறுப்பினர்கள் சிலர். விடுதலைப் புலி[] நெருங்கிய ஆதரவாளர்கள் சிலர். அர[] செயற்பாடு மிகுந்தோர் சிலர் என்று ப[] தரப்பட்டவர்கள் அன்று புலிக[] குறிகளானார்கள். ஒருவருமே புலிகளு[]

5ம் பக்கம் பார்

படிப்பகம்

www.padippakam.com

## க்கத் தொடர்ச்சி

க் காட்டவில்லை. இதனால் ப் பிரச்சனையுமில்லாமல் கைதுகள் r. ஆனால் இதுவரை கிடைக்கப் தகவல்கள் படி முல்லைத்தீவுப் ல் மாத்திரம் ஒரு விடுதலைப் புலி ினர் கைது செய்யப்படும் போது ல் அணிந்த சயனைட் குப்பியைக் விழுங்கி மரணமானார். இவர் இயக்கப் பெயர் அஜித் என்றும் பிரிவில் செயல்பட்டவர் என்றும் ப்படுத்தப்படாத தகவல் ஒன்று க்கிறது. யாழ்ப்பாணத்தில் மாத்திரம் யான வகையில் 75 பேருக்கு ட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். பகுதியில் எத்தனை பேர் என்பது வில்லை. ஆனால் வன்னியைச் சேர்ந்த ப் போராளிக்ள் 6 பேர் வவுனியாவுக்கு இராணுவத்திடம் சரணடைந்தனர்.

செய்யப்பட்ட எல்லோருக்கும் பில் ஒரு பொது இழை. இவர்கள் ருமே ஏதோவொரு வகையில் பிரதித் வர் மாத்தையாவுடன் சம்பந்தப் ர்கள். பல விதங்களிலும் அவருக்கு க்கமானவர்கள் என்று கருதப் ர்கள்.

## த்தையாவும் கைது

ாத்தையாவின் ஆதரவாளர்கள் அல் நெருக்கமானவர்கள் இவ்வாறு கைது ப்பட்டபோது மாத்தையாவும் கைது ட்டார். 2ம் திகதி முன்னிரவு நேரம். லைப் புலிகளின் முப்பெரும் களைச் சேர்ந்த தெரிந்தெடுக்கப்பட்ட று குழுக்கள் மாத்தையாவின் லத்தை முற்றுகை இட்டனர். கத்தின் பிரதி— தளபதியும் சார்ள்ஸ் ணி காலாட்படைப் பிரிவுத் தியுமான பால்ராஜ். விசேட அதிரடிப் ப் பிரிவான சிறுத்தைகளின் தளபதி ணம். கடற்புலிகளின் விசேட தளபதி வ. ஆகிய மூவரின் தலைமையில் ர் மாத்தையாவின் இல்லத்தைச் நனர். மாத்தையாவின் 70 மெய்க்காவல் பினரில் எத்தனை பேர் அந்த ில் இருந்தனர் என்பது சரியாகத் வில்லை. ஆனால் குறைந்தது 35 வது அங்கு நின்றனர். ஆனால் பாணிகளான அவர்கள் தம் களைத் தாக்க முற்படவில்லை. டவுடனேயே தமது ஆயுதங்களைக் ளித்தனர். எந்தவொரு மோதலும் பெறவில்லை. இதேபோல் பிறவிட ில் இருந்த மாத்தையாவின் க்காவல் பிரிவினரும் ஒரு னையுமின்றித் தமது ஆயுதங்களைக் ித்து விட்டனர். ஒருவரும் திருப்பிச் போடவில்லை. இப்படியானதொரு லை நேர்ந்தால் தனது மெய்க் காவல் யைச் சேர்ந்த எவரும் பதில் லில் ஈடுபடக் கூடாது என்று தயா திட்டவட்டமான உத்தரவு ருந்ததும் அதற்கிணங்கவே மெய்க் அணி நடந்து கொண்டிருந்ததும் தெரிய வந்த விடயங்கள். கைது ப்பட்ட 70—80 பேர் தவிர இந்த தயாவின் 70 பேர் கொண்ட மெய்க் அணியினரும் 2 நாட்கள் தடுத்து கப்பட்டிருந்தனர். ஆனால் பின்னர் மெய்க்காவல் அணியினரிடம் தங்கள் கையளிக்கப்பட்ட போது ர்களில் பலர் மீண்டும் ஆயுதம் வாங்க ந்ததாகவும் சிலர் தாம் இயக்கத்தை ட்டு விலக விரும்புவதாகவும் தெரிவித்து ட்டனர்.

## ாட்டம்மான் விசாரணை

ாத்தையாவின் வீட்டுக் கதவை ஒரு 14, 15 வயது மதிக்கத்தக்க துப் போராளி தட்டியிருக்கிறான். ம் மாத்தையா கதவைத் திறந் கெவும் தரக்குறைவான முறையில் மேல்சட்டையைப் பிடித்து தகாத ில் பேசி வாகனத்தில் ஏறும்படி பணித்திருக்கிறான். கோபமுற்ற நிலையில் மாத்தையாவும் இந்தச் சிறுவனைத் தள்ளி கையால் அடிக்க முற்பட்டிருக்கிறார். உடனே பிரதி— தளபதி பால்ராஜ் இறங்கிச் சென்று அந்தப் போராளியை பேசித் துரத்திவிட்டு "அண்ணே! ஒருக்கா வாங்கோ அண்ணே!! எங்களோட" என்று மரியாதையாகக் கேட்டிருக்கிறார். மாத்தையாவும் மறு பேச்சுப் பேசாமல் மௌமாக அவருடன் சென்று சூசை, சொர்ணம், பால்ராஜ் ஆகியோருடன் ஒரே வாகனத்தில் ஏறி சென்றிருக்கிறார். அச்சமயம் மாத்தையாவின் மனைவி (கல்பனா —இயக்கப் பெயர்) பால்ராஜிடம் "இவரை எங்கே கொண்டு போகிறீர்கள்? என்று கேட்டுள்ளார். மாத்தையாவின் மனைவி விடுதலைப் புலி மகளிர் படைப் பிரிவின் முதலாம் அணியைச் சேர்ந்தவர் என்பதும் இந்தியாவில் பயிற்சி பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதற்கு பால்ராஜ் "அக்கா, தலைவர் உத்தரவின் பேரில் இவரைப் பொட்டம்மானிடம் கூட்டிக் கொண்டு போகிறோம்" என்று கூறியுள்ளார்.

மறுநாள் மாத்தையாவின் மனைவி பொட்டம்மானைச் சந்தித்து மாத்தையாவைப் பற்றி விசாரித்துள்ளார். அப்போது உளவுப் பிரிவுத் தலைவரும் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவருமான பொட்டு என்ற பொட்டம்மான் சாவகச்சேரி கல்வயலில் மாத்தையா தங்கியிருக்கிறார் என்றும் தனது நேரடிப் பொறுப்பில் விசாரணை செய்யப்படுவார் என்றும் மிகவும் மரியாதையாகவே அவர் கவனிக்கப்படுவார் என்றும் கூறியுள்ளார். அவரைச் சந்திக்க விரும்பியபோது தற்போதைக்கு அது முடியாது என்றும் விசாரணைகள் முற்றாக குறைந்தது ஆறு மாத காலமெடுக்கும் என்றும் அதற்குப் பின்னர் அது சாத்தியப்படும் என்றும் பதில் அளித்துள்ளார்.

பின்னர் பொட்டம்மான் கீழான உளவுப்பிரிவினர் வந்து மாத்தையா மாறி, மாறித் தங்கியிருந்த கோப்பாய், சுதுமலை, புதுக்குடியிருப்பு வீடுகளைச் சோதனையிட்டுள்ளனர். கூரை ஓடுகளைப் பிரிப்பது முதற்கொண்டு முற்றத்தைக் கொத்திப் பார்த்தது வரை கடுமையான சோதனை நடைபெற்றது. இதன் பின்னர் மாத்தையாவின் மனைவி தனது இரு பெண்குழந்தைகளையும் கடைசியாகப் பிறந்த ஆண்குழந்தையையும் கொண்டு வல்வெட்டித்துறை சென்று விட்டார். தற்போது மாத்தையாவின் குடும்பத்துடனேயே தங்கியிருக்கிறார்.

## பிரபாகரன் விளக்கம்

மாத்தையா மற்றும் ஏனையோரின் கைதுகளை அடுத்து மெல்ல, மெல்ல தகவல் வாய்மொழியாகப் பரவ ஆரம்பித்தது. அத்துடன் வதந்திகளும் தலை விரித்தாடின. இதே வேளை இப்படியான கதைகளில் ஈடுபடுவோரை உளவுப்படையினர் எச்சரித்தும் தண்டித்துமே வந்தனர். இதனால் ஓர் இறுக்கமான சூழ்நிலையே நிலவியது. ஆனால் நா—ளடைவில் கிளாலி, புலோப்பளை போர் பின்னர் பூநகரித் தாக்குதல் என்று பல நிகழ்வுகள் நடக்க, நடக்க மாத்தையா விவ்காரம் மழுங்கடிக்கப்பட ஆரம்பித்தது.

ஆனால் இக் கால கட்டத்தில் விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் வழமைக்கு மாறான ஒரு வித்தியாசமான அணுகு முறையை கையாண்டார். சில பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், மதகுருமார், மதப்பெரியோர்கள், கல்விமான்கள், முன்னாள் பிரஜைகள் குழு உறுப்பினர்கள், ஊர்ப் பிரமுகர்கள் என்று பலதரப்பட்ட மக்களை, தத்தமது மட்டங்களில் அபிப்பிராயம் உருவாக்கக் கூடியோரை (opinion makers) சிறு, சிறு, குழுக்களாகச் சந்தித்துப் பேசினார். இவர்கள் எல்லோருமே விடுதலைப் புலிகளின் நெடுங்கால ஆதரவாளர்கள் என்பத குறிப்பிடத்தக்கது.

இவர்களை அழைத்துப் பேசிய திரு. பிரபாகரன் மாத்தையா தொடர்பாகவே உரையாடினார். மாத்தையா மீதான 10 பக்கக் குற்றப் பத்திரிகை வாசித்துக் காட்டப்பட்டது. இதில் பிரதான குற்றச்சாட்டு இந்திய உளவுப் பிரிவின் சதிக்கு உடந்தையாக இருந்தமையே. பிரபாகரனையும் மேலும் 11 முக்கிய புலிகள் உறுப்பினர்களைக் கொன்றொழிக்கும் சதிக்கும் மாத்தையாவும் துணை போனார் என்பதே இதன் சாராம்சம்.

மேற்படி குற்றப் பத்திரிகை மாத்தையாவுக்கும் பல வாரங்களுக்கு முன்னர் கையளிக்கப்பட்டதாயும் ஜூலை 31ம் திகதிக்கிடையில் பதில் தரவேண்டும் என்றும் மாத்தையா கேட்கப்பட்டதாகப் பிரபாகரன் சொன்னார். இக் காலக்கெடு முடிவடைந்த போதிலும் மாத்தையா எவ்வித பதிலையும் தரவில்லை என்றும் கூறிய பிரபாகரன் தனது தரப்பில் பிரதிநிதி ஒருவர் மாத்தையாவைத் தொடர்பு கொண்டபோது "தேவையென்றால் பிரபாகரன் நேராக வந்து விளக்கம் கேட்கட்டும்" என்று மாத்தையா பதிலளித்ததாகவும் குறிப்பிட்டார். இதையடுத்து இத்தகைய வழிமுறை ஒன்றைக் கையாளும் நிலைமைக்குத் தான் தள்ளப்பட்டதாகவும் பிரபாகரன் கூறியுள்ளார். மாத்தையாவின் நிலைப்பாடு விளங்காத நிலையில் இயக்கம் செங்குத்தாகப் பிளப்பதைத் தவிர்க்கவே பாரிய சுற்றிவளைப்புக் கைதுகள் நடந்ததாகவும் இதனால் ஓர் இக்கட்டான நிலை தவிர்க்கப்பட்டதாகவும் திரு. பிரபாகரன் தெரிவித்தார்.

மாத்தையா மீதான விசாரணைகள் முற்றுப் பெற்றதும் அது தமிழ் ஈழ மக்களுக்கும் வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்களுக்கும் பகிரங்கமாக அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்த பிரபாகரன் இன்னொன்றையும் குறிப்பிடத் தவறவில்லை. "இந்தியாவுடன் சேர்ந்து போராட்டத்தைக் காட்டிக் கொடுக்க முனையும் எவருக்கும் ஒரே தண்டனை தான். அது ரெலோவாக இருந்தாலென்ன ஈ.பி.ஆர்.எல்.எப். ஆக இருந்தாலென்ன மாத்தையாவாக இருந்தாலென்ன? தண்டனை ஒன்றுதான்" இதுவே பிரபாகரன் கூற்று. அத்துடன் இச் சதி எப்படி அம்பலமானது என்பது பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

**திரு. பிரபாகரனின் இச் செயல்பாட்டின் மூலம் படிப்படியாக யாழ்ப்பாண மக்களிடத்தில் உண்மை நிலைமை பற்றிய விளக்கம் மலர்ந்தது. இந்தியாவின் சதித் திட்டம் அம்பலமாகியது. இவ்வாறு பரவலாகத் தகவல்கள் அடிபடத் தொடங்கின. நறுக்கும் துணுக்குமாக வந்த இத்தகவல்களைப் பலமுறை சரி, பிழை பார்த்துப் பொறுமை—மயாகத் தொகுத்தே இச்செய்திக் கட்டுரை வரையப்பட்டுள்ளது.**



நரேன், குமரப்பா, இந்திய ராணுவ உயரதிகாரியுடன்

## இந்தியாவின் குறிக்கோள்

இந்தியப் படைகள் புலிகளுடன் போரிட்ட காலத்திலேயே மாத்தையா, பிரபாகரன் பற்றிய பல முரண்பட்ட தகவல்கள் இந்தியப் பத்திரிகைகளில் வெளியாகின. ஒருவர் கடும் போக்காளர் மற்றவர் மென்போக்காளர் என்று மாறி மாறி செய்திகள் வந்தன. இருவருக்குமிடையில் பிளவு என்றும் செய்திகள் வந்தன. இறுதியில் வன்னிக்காட்டில் வைத்து மாத்தையா பிரபாகரனைச் சுட்டுக் கொன்று விட்டார் என்றும் செய்தி வந்தது. பின்னர் றோ அதிகாரி ஒருவர் தாமே இப் பொய்த் தகவல்களைப் பத்திரிகைகளுக்கு வழங்கியதாகவும் பிரபாகரன் மரணமடைந்தால் எத்தகைய பின்விளைவுகள் ஏற்படும் என்பதை அனுமானிக்கவே இப்படிச் செய்ததாகவும் கூறினார். அக்காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிக்காமல் அதன் தலைமைத்துவத்தை மாத்திரம் ஒழிக்கக் கூடிய சாத்தியக் கூறுகளை இந்தியா கடுமையாக ஆராய்ந்தது. இதையடுத்துப் போர் முடிந்து இந்தியப் படைகள் வெளியேறின.

ராஜிவ் காந்தி தேர்தலில் தோற்று வி.பி.சிங் வந்தார். வி.பி.சிங் போய் சந்திரசேகர் வந்தார். சந்திரசேகர் போய் தேர்தலும் வந்தது. தேர்தல் காலத்தில் ஸ்ரீபெரும்புதூரில் ராஜிவ் காந்தி கொல்லப்பட்டார். விடுதலைப் புலிகளே இக்கொலைக்குப் பொறுப்பு என்று கூறிய இந்திய நிர்வாக யந்திரம் புலிகளையும் புலிகளின் ஆதரவாளர்களையும் இந்திய மண்ணில் வேட்டையாடியது. இக் கட்டத்தில் சில இந்திய அரசியல்வாதிகள், மற்றும் வெளியுறவுத் துறை அதிகாரிகள் இந்தியப் படைகள் இலங்கை சென்று பிரபாகரனைக் கைது செய்ய வேண்டும் அல்லது கொல்ல வேண்டும் என்று விரும்பினர். ஆனால் இது சாத்தியப் படாது என்ற நிலையில் எந்நேரமும் இலங்கை சென்று ஒரு மின்னல் வேகத்

6ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

5ம் பக்கத் தொடர்ச்சி

தாக்குதல் மூலம் பிரபாகரனைக் கொல்வதற்கான திட்டம் உருவாக்கப்பட்டது. சில அதிரடிப்படையினர் தொடர்ந்தும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

## பிளவுபடுத்தும் சதி

நரசிம்மராவ் பதவிக்கு வந்ததையடுத்து வெளியுறவுக் கொள்கையை ஒரு மீகாமனில்லாத மரக்கலமாக ஆக்கிவிட்டார். இக் கட்டத்தினால் "றோ" போன்ற உளவு அமைப்புக்கள் கட்டுப்பாடற்ற நிலையில் பல திட்டங்களை உருவாக்கினர். அவற்றில் ஒன்று தான் விடுதலைப் புலிகள் இயக்கத்திடையே பிளவு ஏற்படுத்துவது. ஏற்கனவே இந்திய அதிகாரவர்க்கம் முன்யோசனையுடன் ஒரு காரியத்தைச் செய்தது. ராஜிவ் காந்தி கொலை வழக்கில் பிரபாகரனைக் குற்றவாளியாக்கினால், ஏதோவொரு வகையில் அதனை நிரூபித்தால் எந்தவொரு கால கட்டத்திலும் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் ஒரு சமரசத்துக்கு வர முடியாது. இந்தியப் பொதுசன அபிப்பிராயம் இதனை அனுமதிக்காது. ஆனால் மறு திசையில் நோக்கும் போது சிங்கள அரசு ஒரு மிகக் கடுமையான இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்தால் புதுடில்லிக்குத் தன் தொப்புள் கொடி அறுந்த நேச சக்தியான தமிழ்ஈழ மக்களுடன் சார்ந்து கொள்வது தவிர்க்க முடியாதது. இக் கட்டத்தில் வலிமை குறையாத ஆனால் இந்தியாவுக்கு ஆதரவாகச் செயல்படக் கூடிய புலிகள் இயக்கம் தேவை. அப்படியான நிலைமை பிரபாகரன் இருக்கும் வரை உருவாக முடியாது. இதனால் போக வேண்டியது பிரபாகரனே. (இந்தியக் கண்ணோட்டத்தின் படி) இதற்கு மாற்றுப் பரிகாரம் பிரபாகரனை ஒழித்துக் கட்டிவிட்டு வேறொருவர் தலைவராகும் சூழ்நிலையை உருவாக்குவது. இந்நிலையில் இந்திய அதிகாரவர்க்கம் மேற்கொண்ட தொலைநோக்கத் தன்மை கொண்ட முடிவு ராஜிவ் காந்தி கொலைவழக்கு குற்றம் பத்திரிகைகளில் மாத்தையாவின் பெயரை சேர்க்காததே. தலைவர் பிரபாகரன். உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான். மகளிர் பிரிவு அகிலா ஆகிய மூவரின் பெயர்கள் மாத்திரமே குற்றப் பத்திரிகையில் சேர்க்கப்பட்டது. இதன் மூலம் பிரபாகரன் தான் ராஜிவ் கொலைக்குச் சூத்திரதாரி. அவருடன் எந்தத் தொடர்பும் வைக்க முடியாது. ஆனால் அவரில்லாத நிலையில் மாத்தையாவோ வேறெவரோ தலைவரானால் புலிகளுடன் இந்தியா உடன்பாடு காண முடியும் என்பது போன்ற முன்னேற்பாடாக இது அமைந்தது. பிரதி— தலைவரைக் குறிப்பிடாமல் தலைவரையும் உளவுப் பிரிவுத் தலைவரையும் மாத்திரம் குற்றவாளிகளாகக் குறிப்பிட்டது இந்தியா. இதன் மூலம் பிரபாகரன்— மாத்தையா நல்லுறவைப் பிளக்க இந்தியா வித்திட்டது.

## சதி வலைப் பின்னல்

சதிக்கான வித்திடப்பட்டாலும் கூட அது முளைவிட்டு வேரோட தட்ப வெப்ப சூழ்நிலை, மண்வளம், நீர்வளம் எல்லாம் தேவை. அது போல் இந்தியச் சதி வளர்பிறையாய் வடிவம் பெற ஈழத்துச் சூழ்நிலைகள், தமிழகத்து நிலைபரங்கள் கை கொடுத்தன. தமிழ் ஈழத்தில் பிரபாகரன் மாத்தையாவுக்கிடையில் வேற்றுமைகள் வளர்ந்தன. இந்தியாவில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமானவர்கள் பல நெருக்கடிகளுக்கு ஆளானார்கள்.

இந்நிலையில் இந்திய அதிரடியணி ஒன்று யாழ்ப்பாணத்துக்குச் சென்று பிரபாகரனைத் தீர்த்துக் கட்டுவதற்கு வேண்டிய தகவல்கள், உளவுகளைச் சொல்லக்கூடிய ஓர் ஐந்தாம் படை தமிழ் ஈழ எல்லைக்குள் தேவைப்பட்டது. அந்த ஐந்தாம் படை புலிகள் இயக்கத்துக்குள்ளேயே இருந்தால் அது இன்னும் உபயோகமாக இந்தியாவுக்கு அமைந்துவிடும். இந்த முயற்சியில் இந்தியா உளவுப் பிரிவு இறங்கிச் செயல்பட்ட அதே வேளை பூர்வாங்க திட்டம் குறித்தும் சில சந்தேகங்கள் கொள்ள ஆரம்பித்தது.

1. இதனால் ஏற்படக் கூடிய சர்வதேச பாதிப்பு

2. இலங்கை அரசாங்கம் இதற்கு வெளிப்படையாக ஒத்துழைக்குமா என்பது ஐயம்

3. இந்தியாவின் நேரடியாகப் பிரபாகரனைக் கொல்வதால் தமிழகத்தில் ஏற்படக் கூடிய கொந்தளிப்பு

4. தமிழ் ஈழ மக்கள் இந்தியாவுடன் அந்நியப்படும் அபாயம்

5. எல்லாவற்றுக்கும் மேலாக இப்படியான அதிரடி முயற்சி தோல்வியில் முடிந்தால் ஏற்படும் அபகீர்த்தி.

இக் காரணங்களால் றோ தனது பூர்வாங்க திட்டத்தில் மாற்றம் ஏற்படுத்தியது. எந்த ஐந்தாம் படை மூலம் இந்திய அதிரடிப்படையினருக்கு ஒத்தாசைகள் பெற்றுக் கொள்ள திட்டமிடப்பட்டதோ அதே ஐந்தாம் படையினர் மூலமே முழுக் காரியத்தையும் சாதிக்க உத்தேசிக்கப்பட்டது. தமிழ் ஈழ மக்களையோ விடுதலைப் புலிகளிலோ ஒரு சாராரைக் கொண்டே பிரபாகரனைக் கொன்றுவிட்டால் அது இந்தியாவின் பெய்ருக்கு களங்கம் ஏற்படுத்தாது என்பதே புதிய திட்டமாகியது. பிரபாகரனை மாத்திரம் அல்ல. அவருடன் மேல்மட்டத் தலைமைத்துவத்தில் உள்ள சிலரையும் முடித்துவிட்டால் புலிகள் இயக்கம் திசைதெரியாது திக்குமுக்காடும். அக் காலகட்டத்தில் புதிய தலைமைத்துவம் ஏற்படும். இந்தியா அதனைத் தனக்குச் சாதகமாகக் கையாளும். இதுவே திட்டம். ஆனால் பல முறை முயன்றும் இந்திய உளவுப் படையினரால் ஊடுருவ முடியாத ஒரே இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குள் எப்படி ஊடுருவுவது? யாரை வளைத்துப் பிடிப்பது? இக் கட்டத்தில் பிரபாகரனுக்கும் மாத்தையாவுக்கும் இடையில் வளர்ந்து வந்த விரிசல் இந்தியாவின் கவனத்தை ஈர்த்தது. தனது பாதத்தைச் சரியாகக் கழுவாத நளமகாராசன் குதிக்கால் தூசியூடாக சனீஸ்வரன் உட்புகுந்த கதை போல் நம்மவரிடையே ஏற்பட்ட விரிசலை இந்தியா வழமை போல் நன்கே பயன்படுத்தியது. சதி வலைப்பின்னல் உருவானது.

## ஒற்றைக் கால் "எஞ்சினியர்"

இந்தியா உளவுப் படையினர் முயற்சிக்குப் பலியானவர்களில் இருவர் முக்கியமானவர்கள். ஒருவர் சென்னையில் பல காலம் தங்கியிருக்கும் வடமராட்சி வாசியான தியாகராசா என்பவர். மற்றவர் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த "எஞ்சினியர்" என்பவர். இந்தத் தியாகராசாவுடன் சில பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் திட்டத்தை பூரண விபரங்களுடன் தமிழ் ஈழத்துக்குக் கொண்டு வந்தவர் எஞ்சினியர் தான். இந்த "எஞ்சினியர்" என்பவரின் இயற்பெயர் மாணிக்கவாசகர் மகேந்திரராஜா. இவரது பட்டப் பெயர் எஞ்சினியரே ஒழிய இவர் தொழில் முறைப் பொறியியலாளர் அல்ல. வாகனங்கள் ஓட்டுவதில் பழுதுபார்ப்பதில் மிகவும் சமர்த்தர். இந்தத் திறமையினால் தான் அவருக்கு "எஞ்சினியர்" என்று பெயர். இவர் மறைந்த விடுதலைப் புலி வீரன் லெப்டினன் வாசன் என்ற குலேந்திரராசாவின் சகோதரன். வாசன் கிட்டு யாழ் தளபதியாக இருந்த போது பல தீரமான செயற்பாடுகளில் ஈடுபட்டுப் பின் வீரமரணத்தைத் தழுவியவர்.



சாகவச்சேரியில் இந்திய யுத்தக்கைதிகள் விடுதலை

மகேந்திரா என்றும் எஞ்சினியர் என்றும் அழைக்கப்பட்ட இவரது சகோதரன் புலிகளின் "லோக்கல் டிரெயினிங்" பெற்று "ஹெல்பர்" ஆகச் செயல்பட்டவர். புலிகளுக்கு வாகனம் கூட ஓட்டுவார். 1987 கட்டுவனில் இவரது வாகனம் ஹெலித் தாக்குதலுக்குட்பட்ட போது ஒரு காலை இழந்தவர். தமிழகத்தில் நெய்வேலி சென்று செயற்கை கால் பொருத்தியவர். பின்னர் 1991 இல் புலிகளின் படகில் இந்தியா சென்று ஜெய்பூர் சென்று கால் ஒன்றைப் பொருத்திக் கொண்டார். அச் சமயம் ராஜிவ் காந்தி கொலை செய்யப்பட்டார். இலங்கை— இந்தியா "நாட்டுப் படகுச் சேவை" ஸ்தம்பித்தது. ராஜிவ் காந்தி கொலைக்குப் பின்னர் இலங்கைத் தமிழர்கள் கணக்கு, வழக்கின்றி இந்தியாவில் கைது செய்யப்பட்டபோது இவரும் கைது செய்யப்பட்டார். இச் சமயத்தில் "றோ" அமைப்பு அவர் மேல் கண் வைத்தது. தியாகராஜா. எஞ்சினியர் ஆகிய இருவருடனும் திட்டம் வரையப்பட்டது. இத்திட்டத்தை எடுத்துக் கொண்டு எஞ்சினியர் இலங்கை திரும்பினார் என்று சந்தேகிக்கப்படுகிறது. எந்தவிதப் பிரச்சனையுமின்றிக் கட்டுநாயக்க வந்து வவுனியா ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். எந்த விதச் சிரமமுமின்றி இவர் தென்னிலங்கையூடாக வந்து சேர்ந்தது இச் சதி முயற்சிக்கு இலங்கை அதிகாரிகளின் அனுசரணையும் உண்டென்று காட்டியது. இந்த "எஞ்சினியர்" மாத்தையாவுக்கு மிக நெருக்கமானவர். இதே சமயம் இவரது உடனடி சுற்றத்திலிருந்து 5.6 பேர் புலிகளில் இணைந்து போராடி வீரமரணம் எய்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உளவுத் துறை உசார் அடைந்தது

ஜெய்ப்பூர் காலணிந்தவர். இந்தியாவில் சிறைபிடிக்கப்பட்டவர். எப்படி தென்னிலங்கையூடாகப் பிரச்சனையின்றி வந்தார் என்ற சந்தேகமே புலிகளின உளவுத் துறையை உஷார் படுத்தியது ஆனால் அந்நேரம் இவ்வளவு பார தூரமான சதிப் பின்னணி இருக்கும என்று அவர்கள் கற்பனை பண்ணிக்கூட இருக்கவில்லை. எஞ்சினியர் கவனமாக நோட்டமிடப்பட்டார்.

இதேவேளை சிவானந்தராஜா என் வரும் புலிகளால் கைது செய்யப்பட்டார் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இவ முல்லைத்தீவில் பணியாற்றியவர். மாத்தை யாவுக்கு நெருக்கமானவர். முல்லைத்தீவ பிரஜைகள் குழுவிலும் பின்னர் வட— கிழக்கு பிரஜைகள் குழுவினதும் இணை ப்பாளராக செயல்பட்டவர். பின்ன மாத்தையாவின் பக்கபலத்துடன் யாழ் மாவட்ட செஞ்சிலுவைச் சங்கக் குழுவில தலைவராகப் பணியாற்றினார். பின்ன பிரபாகரன் பணிப்புரையின் பேரில் பழை செஞ்சிலுவை சங்கக் குழு கலைக் ப்பட்ட போது பதவி இழந்தவர் இவருக்கெதிராக சில ஊழல் குற் ச்சாட்டுகள் எழுந்தபோது புலிகளா கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். இந்த விசா ணைகளின் போது திரு. சிவானந்தராச தனது செல்வாக்கினைப் பாவித்து செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகஇந்திய தூதரகத்துடன் சில தொடர்புகளை பேணி வந்தார் என்று துப்பு துலங்கியது. இந்தப் புது தகவல்களுடன் "எஞ்சினியர்" மீதான கண்காணிப்பும் சூடு பிடித்தது "எஞ்சினியர் கைது செய்ய ப்பட்டா அவர் கொடுத்த தகவல்க ளையடுத் புதிய திருப்பம் ஏற்பட்டது பிரபாகரனையும் முக்கிய தலைவர் ளையும் கொல்வதற்கான முக்கிய ச அம்பலமாகியது. மாத்தையாவும் அதற் உடந்தை என்று சந்தேகிக்கப்பட்டது மாத்தையாவுக்கு எதிரான குற்ற பத்திரிகை தயாரிக்கப்பட்டது. இ மாத்தையாவிடம் கையளிக்கப்பட்டு வி க்கம் கோரப்பட்டது. ஆனால் மாத்தை அதற்குள் பதிலளிக்கவில்லை. குறித் காலக்கெடு முடிவடைந்த பின்னரு மாத்தையா "முட்டிக் கொண் நின்றதாலேயே கைது செய்யப்பட்டா அவருடன் கூட வேறு பலரும் இரவில் கைது செய்யப்பட்டனர்.

## தொடரும் விசாரணைக

மாத்தையா மற்றும் ஏனையோரி கைதுகளின் பின்னர் விசாரணைக தொடர்ந்தன. சுமார் 500 பேர்கள் கை செய்யப்படாமல் விசாரணைக்குட்படுத் ப்பட்டனர். இவர்களில் மூர்த்தி, கரிகால யோகி போன்ற முன்னாள் மக்க முன்னணிப் பிரமுகர்களும் அடங்குவ ஒரு நடைமுறை நிர்ப்பந்தம் போ இவர்கள் விசாரணை செய்யப்பட்ட பொது மக்கள் பலரும் விசாரணை செய்யப்பட்டனர். மாத்தையாவுடன் கூ கைது செய்யப்பட்டவர்களில் 30 வரையில் இன்று விடுதலை செய்யப்பட விட்டனர். இதே வேளை எஞ்சினி உட்பட 9 பேர் இந்த விசாரணைய குற்றவாளிகளாகக் காணப்பட்டு மர

7ம் பக்கம் பார்க்

படிப்பகம்

www.padippakam.com

6ம் பக்கத் தொடர்ச்சி

தண்டனை பெற்றுள்ளனர். இவர்களில் ஒருவர் மணியம் என்ற வியாபாரி. இவர் பல தடவைகள் வவுனியா வந்து பொருட்கள் கொள்முதல் செய்பவர். இன்னொருவர் செ[illegible]லுவை சங்கத்துக்காக காங்கேசன்துறைக்கு வாகனமோட்டிச் செல்பவர். இவர் பெயர் தெரியவில்லை. விசாரணைகள் தொடர்ந்தும் நடக்கின்றன. ஆனால் இதே வேளை விடுதலைப் புலி மற்றும் கடல்புலி பணிமனைகளில் பிரபாகரனும் மாத்தையாவும் சேர்ந்திருந்த புகைப்படங்கள் கழற்றப்பட்டு பிரபாகரன் தனியே நிற்கும் படங்கள் தொங்கவிடப்படுகின்றன. பொதுமக்களும் தமது இல்லங்களில் உள்ள மாத்தையா படங்களை அகற்றுகின்றனர். மாத்தையா ஒரு மறக்கடிக்கப்பட்ட மனிதராக மாறுகிறார். அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஒரு படி மேலே போய் பிரதி—தலைவர் என்ற பதவியே இருந்ததில்லை என்று சோற்றில் நீற்றுப் பூசணிக்காயை மறைக்கிறார். (விரைவில் மாத்தையா என்றொருவரே இருக்கவில்லை என்று சொன்னாலும் சொல்லலாம்) பல முக்கிய பொறுப்புகள் வகித்தாலும் மாத்தையாவுக்கு கிட்டுவுக்கு இருந்த வசீகர ஆளுமை இருக்கவில்லை. அத்துடன் தற்போதைய சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் வெற்றிமேல் வெற்றி பெற்றுக் கொண்டு வருகின்றனர். பால்ராஜ். சொர்ணம். அன்பு என்று புதிய தளபதிகள் மக்கள் அபிமானத்தைத் தட்டிக் கொள்கின்றனர். அத்துடன் மாததையா. அரசியல் கட்சித் தலைவராகித் தன் ஆளுமையைப் பெல வீனப்படுத்திக் கொண்டார். மேலும் தற்போது தமிழ் ஈழத்தில் பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் பிரபாகரனின் ஆளுமைக் கவர்ச்சிக்கு முன்னால் மாத்தையாவுக்குப் பெரிதாக ஒன்றும் இல்லாததில் ஆச்சரியம் இல்லை.

## குற்றப் பத்திரிகை


மாத்தையா மீதான குற்றப்பத்திரகை ஒரே ஒரு தடவை படித்துக் காட்டப்பட்டதே ஒழிய பிரதிகளாக வழங்கப்படவில்லை. எனவே கேள்விச் செவியர்களின் நாளும் பொழுதும் நலிவடையும் ஞாபகச் சக்தியை ஆதாரமாகக் கொண்டே இதனை எழுத வேண்டியுள்ளது. எனவே இது முழுமையானதல்ல. இதன் சாராம்சத்தில் கூடச் சில சில சிறு தவறுகள் இருக்கலாம்.

இந்திய உளவுப்படையின் சதிக்கு உடந்தையாகிப் போனதே பிரதான குற்றச்சாட்டு. இந்தியா— இலங்கைச் சதியாளர்களுக்குத் துணைபோகும் விதத்தில் இந்தியா— இலங்கைப் படையினரின் அனுசரணையுடன் நேரடியாக அவரர்களது மறைமுக சக்திகளூடாக அல்லது இந்தியா— இலங்கைப் படையினர்க்கு உதவியும் ஒத்தாசையும் புரிந்து விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனையும் வேறு 11 முக்கிய புலிப் பிரமுகர்களையும் கொன்றொழிக்க முற்பட்டார் என மாத்தையா குற்றம் சாட்டப்பட்டுள்ளார். இந்தப் பதினொரு [illegible] 10 பேர்கள் மாத்திரமே கிடைத்துள்ளன. ஒன்று கிடைக்கவில்லை. கொலைக்குறி வைக்கப்பட்டதாகச் சொல்லப்படுபவர்கள் அன்ரன் பாலசிங்கம். பொட்டம்மான். பால்ராஜ். இளங்குமரன். (பேபி சுப்பிரமணியம்) சூசை. சொர்ணம். புதுவை இரத்தினதுரை. தமிழ்செல்வன்(தினேஷ்) கருணா நடேசன் ஆகியோர்.

பிரபாகரனையும் மேற்குறித்த தலைமைத்துவத்தையும் ஒழித்துவிட்டுப் புதிய தலைமைத்துவம் ஒன்றை இயக்கத்துக்கு ஏற்படுத்துவதும் அதன் பின்னர் இந்தியா— இலங்கை கூட்டுறவுடன் பிரதேச சுயாட்சி கொண்ட அரசியல் அமைப்பொன்றை வட—கிழக்கிற்கு ஏற்படுத்தி தமிழ்ஈழ போராட்டத்தைக் கைவிடுவது என்பதே மாத்தையாவின் குறிக்கோள் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இது தவிர பொட்டம்மான் என்று நினைத்து உளவுப் பிரிவின் துணைத் தலைவர் பொற்கோ சென்ற வாகனத்துக்கு குண்டு எறிந்த சதி முன்னாள் தளபதி. கிட்டுவுக்கு குண்டெறிந்த சதி. கிட்டு யாழ்ப்பாணம் திரும்புவது குறித்து இந்தியாவுக்குத் துப்புக் கொடுத்தது. கிறெசி செய்த சில ஒழுக்கப் பிறழ்வுகளுக்குத் துணை போனது. கட்சிக்கிளை உறுப் பினர்கள் ஊழல்கள். துஷ்பிரயோகங்களை மூடி மறைத்தது. கலைக்கப்பட்ட கட்சிக் கிளை உறுப்பினர்களிடம் அதிருப்தியை வளர்த்து போட்டி அமைப்பு உருவாக்க முற்பட்டது போன்ற குற்றச் சாட்டுகளும் குற்றபத் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளனவாம்.

இது உண்மையென்றால் ஒன்றை மாத்திரம் குறிக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் எவரும் முழுமையாக நம்பிவிட முடியாது. ஆனாலும் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு விசாரணையில் இருக்கும் போதுள்ள சப்ஜுடிஸ் ( sub-Judice) விதிகளில் பின்பற்றி கருத்துக் கூறுவது இங்கே தவிர்க்கப்படுகிறது. ஆனால் அதே வேளை மாத்தையாவுக்கு ஒரு முழுமையான நீதிவிசாரணை நடைபெற வேண்டும் என்பதும் அதன் பெறுபேறுகள் வலியுறுத்தப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட வேண்டியவையாகிறது.



வன்னிக்காட்டில் வை. கோபால்சாமியுடன்

## யோகியின் நிலை

மக்கள் முன்னணிச் செயலாளர் யோகியின் நிலைமையும் இங்கு கவனத்தை ஈர்க்கும் ஒன்றாகும். மக்கள் முன்னணிக் கலைப்புடன் யோகியின் வாராந்த "புலிகளின் குரல்" வானொலிப் பேச்சு நின்றது. பத்திரிகைகள் பேட்டிகளும் நின்றன. மக்கள் முன்னணி கலைக்கப்பட்ட பின்னர் சிறு சிறு குழுக்களாகப் பொதுமக்கள். ஆதரவாளர்களைச் சந்தித்து ரகசிய உரையாடல்கள் நடத்தினார் என்ற சந்தேகம் யோகியின் வீழ்ச்சிக்கு வழிகோலியது. ஆனாலும் மாத்தையாவைப் போலல்லாது அவ்வப்போது பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். ஆனால் அண்மையில் யோகி புனர்வாழ்வு பெற்று உயர் கல்வித் துறையில் சில பொறுப்புக்களையும் பெற்றார். யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மாணவர்களுடன் தொடர்புகளைப் பேணி வந்தார். ஆனால் இந்தியச் சதி விவகாரத்தையடுத்து மாத்தையாவுடன் நெருக்கமான பழைய மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் பலரும் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். யோகியும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் வேறு பல முன்னாள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் தம்மைக் குற்றமற்றவர் என்று நிரூபித்துவிட்டனர். ஆனால் யோகியின் நிலைமை . அவ்வளவு திருப்திகரமாக இல்லையென்று ஒரு தகவல் தெரிவிக்கிறது. அழிக்கப்பட வேண்டிய தலைமைத்துவப் பட்டியலில் யோகியின் பெயர் இல்லாததும் அவர் மக்கள் முன்னணி ஆதரவாளர்களுடன் குசு. குசு கூட்டங்கள் நடத்தினார் என்ற பழைய குற்றச் சாட்டும் அவருக்கு இன்னும் பாவ விமோசனம் அளிக்கவில்லை என்றே கூறப்படுகிறது. யோகி கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். என்றும் ஓர் உறுதிப்படுத்தப்படாத தகவல் உண்டு.



பிரபாகரன், நெடுமாறன், மாத்தையா

## அடுத்தது என்ன?

ஏற்கனவே குறிப்பிட்டது போல் மாத்தையா மீதான விசாரணையை ஒரு நீதி மன்ற விசாரணை போலவே கருதி அது பூரணமடையும் வரை கருத்துக் கூறுவது தவிர்க்கப்பட்டுள்ளது. இந்த விசாரணையின் இறுதி முடிவு விடுதலைப் புலிகளால் பகிரங்கப் படுத்தப்படும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விசாரணையில் மாத்தையா குற்றமற்றவராகக் காணப்பட்டால் கூட மீண்டும் பழையபடி இயங்குவார் என்று கருதிவிட முடியாது. ஏனெனில் மாத்தையாவைச் சதிக்கு உடந்தையாக்க வெறும் முயற்சிதான் செய்யப்பட்டிருக்கலாம் என்ற சாத்தியக் கூறும் உண்டு. மாத்தையா குற்றமற்றவரென்று காணப்பட்டாலும் பிரபாகரன் மாத்தையாவுக்கிடையில் பிளவு ஏற்படுத்துவதில் "றோ" வெற்றி பெற்றது என்றே கூறவேண்டும். ஆனால் உண்மையில் மாத்தையா உயிருக்கு ஆபத்து ஏற்பட முன்னரே சதி முறியடிக்கப்பட்டது தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போன நிலைதான். ஏனெனில் இன்றைய யதார்த்த நிலை என்னவென்றால் பிரபாகரன் ஒரு இயக்கத்தின் தலைவர் மாத்திரமல்ல. தமிழ் தேசிய எழுச்சியின் வடிவம். விடுதலைப் போரின் சின்னம். இன்றைய கால கட்டத்தில் அவரது தலைமைத்துவம் ஈழத் தமிழினத்துக்கு இன்றியமையாததாகி விட்டது. பாரதி பாடல் வரியின்படி "ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்தபின்னே வாராது போல் வந்த மாமணியைத் தோற்க முடியாது."

"தனிமனிதர்கள் அழியலாம். ஆனால் தத்துவம் அழியாது" என்ற வாசகம் சித்தாந்த ரீதியாகச் சரியாகத்தான் ஒலிக்கின்றது. ஆனால் பிரபாகரன் என்ற தனிமனிதன் போன பின்னர் தமிழ் ஈழ லட்சியம் பலமாகப் பன்னெடுங்காலம் நிலைக்கும் என்று நினைப்பவர்கள் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்பவர்கள். அதற்கு மாத்தையாவும் விதிவிலக்கல்ல.

படிப்பகம்